**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.297/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | சந்தனசுப்பு, வயது 52 |
| Father Name/Husband Name | : | சிவஞானம் |
| Village | : | வானரமுட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மெக்கல் கடை வைத்துள்ளேன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of January 2025.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது வானரமுட்டியில் வசித்து மெக்கல் கடை வைத்து தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் எங்கள் ஊர்க்காரர் அடிக்கடி கடைக்கு வருவார். கடந்த 08.07.2024 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கடையை திறந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தேன்.
2. அப்போது 09.40 மணியளவில் நான் வீட்டிற்கு டீ சாப்பிட சென்றேன். போய்விட்டு உடனே வந்துவிட்டேன். அப்போது கடையில்யாரும் இல்லை. கடையில் வந்து பார்த்த போது கல்லாவில் வைத்திருந்த ரூ.3000/–ஐ காணவில்லை. அதன் பின்னர் வீட்டில் என் மனைவிக்கு போன் செய்து கேட்டேன்.
3. அவர் நான் எடுக்கவில்லை என்று சொன்னார். அதன் பின்னர் என் கடையில் பொறுத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளை பார்த்த போது, கடையில் ஆஜர் எதிரி தான் கடைக்குள் வந்து கவுண்டர் மூலமாக கையை உள்ளே விட்டு கல்லாவில் இருந்த ரூபாயை எடுத்தார் என்பது தெரியவந்தது.
4. அதன் பின்னர் நான் அந்த கேரா பதிவுகளை Pendrive மூலம் பதிவு செய்து அதனை எடுத்துக் கொண்டு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் பின்னர் 19.07.2024 ஆம் தேதி சி.டி யாக பதிவு செய்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

5. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. புகார் என்றைக்கு கொடுத்தீர்கள் என்றால் சம்பவ தேதியன்றே கொடுத்தேன். புகார் கொடுத்த போது ரூ.3000/- என்ன என்ன நோட்டுகளாக இருந்தது என்று நீங்கள் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம்.
2. நீங்கள் கொடுத்த புகாரில் உங்கள் கடையில் இருந்த சி.சி.டி.வி பதிவுகளை எடுத்து Pendrive உடன் சேர்த்து கொடுப்பதாக புகாரிலும் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம். உங்களிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் நீங்கள் புகாரில் புகாருடன் Pendrive கொடுத்ததாக சொல்வதும் ரூபாய் நோட்டுகளின் விவரங்களும் இல்லை என்றால் சரிதான். ரூ.3000/- காணாமல் போனதாக உள்ளது
3. அதனால் நீங்கள் இந்த புகார் கொடுத்த பின்னரும் மீண்டும் ஒரு புகார் அன்றைய தினமே கொடுத்தீர்கள் என்றால் ஆம். உங்கள் கடைக்கு அருகே நிறைய கடைகள் உள்ளன என்றால் சரிதான் அவர்களை விசாரித்தார்களா என்றால் சரிதான்.
4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் உங்கள் கடையில் பணம் காணாமல் போனதாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.